பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 07 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** அரசியல் சாசனத்தின் மாண்பை காக்க மக்கள் பிரதிநிதிகள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**2.** வியட்நாம் படகு விபத்தில் **15** இந்திய சுற்றுலாப்பயணிகள் உயிரிழந்த சம்பவத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

**3.** ஹைதராபாதை புல்லட் ரயில் சேவை முனையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

**4.** ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அனைவரின் ஒத்துழைப்பு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

**5.** **23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

அரசியல் சாசனத்தை நிலைநாட்டுவதற்கும், மக்கள் நலனை பேணிகாப்பதற்கும் மக்கள் பிரதிநிதிகள் கட்சி வேறுபாடுகளை கடந்து மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

பீகார் மாநிலத்தில் 18-ஆவது சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர், அரசியல் கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கையானது என்று கூறினார்.

இதுபோன்ற பயிற்சித் திட்டங்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அரசியல் சாசன நெறிமுறைகளுக்கு உட்பட்டு சிறப்பாக கடமையாற்ற துணை புரியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்த மக்கள் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களையும், மக்களுக்கான வாய்ப்புகள் குறித்தும் சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவையில் விவாதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கேள்விநேரம், அலுவல் ஆய்வுக்குழு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பேரவை நடவடிக்கைகளை ஆக்கப்பூர்வமானதாகவும், இயல்பாகவும் நடத்திச் செல்ல ஒத்துழைப்பு நல்க வேண்டிய பொறுப்பு உறுப்பினர்களுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், நேரடி மொழி மாற்ற தொழில்நுட்பம் ஆகியவற்றை நன்கு புரிந்துகொண்டு வெளிப்படைத் தன்மையுடன் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மக்கள் நலனை கருத்தில்கொண்டு அவையில் முன்வைக்கும் கருத்துகள் அரசின் கொள்கையில் நேர்மறையான மாற்றங்களை அளிக்கும் என்றும், வருங்கால சந்ததியினருக்கு மாற்றங்களை அளிக்கும் புதிய சட்டங்களை உருவாக்க வழிவகுக்கும் என்றும் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வியட்நாமில் இன்று பிற்பகல் நேரிட்ட படகு விபத்தில் இந்திய சுற்றுலாப் பயணிகள் 15 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் எட்டு பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு வியட்நாம் பகுதியில் உள்ள தீவுக்கு, **32** இந்தியர்கள் மற்றும் **4** பணியாளர்களுடன் இந்த படகு சென்றுகொண்டிருந்தபோது அலையில் சிக்கி படகு கவிழ்ந்து இந்த விபத்து நேரிட்டது.

அப்பகுதியில் இருந்த படகுகள் மூலம் பயணிகள் மீட்கப்பட்டனர்.

கடல் மிகவும் கொந்தளிப்பாக இருந்ததால், மீட்புப்பணி மிகவும் கடினமாக இருந்ததாக கூறப்படுகிறது.

இந்திய பயணிகள் சென்று கொண்டிருந்த படகு விபத்துக்குள்ளானதை அங்குள்ள இந்திய தூதரகம் உறுதி செய்துள்ளது.

**Ho Chi Minh** நகரில் உள்ள இந்திய தூதரகம் கட்டுப்பாட்டு அறையை அமைத்துள்ளது.

அதற்கான தொலைபேசி எண்கள் **8 4 3 6 2 8 1 7 9 3 0**

மற்றும் **8 4 9 1 5 5 2 3 7 1 4** ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**Honay**-யில் உள்ள கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொள்ள **8 4 9 1 3 0 8 9 1 6 5** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வியட்நாமில் உள்ள இந்திய தூதரகம் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக முதலமைச்சர் திரு விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்தவர்களின் உடல்களை கொண்டுவர தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதை புல்லட் ரயில் சேவை முனையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஹைதராபாதிலிருந்து சென்னை, புனே, பெங்களூரு மாநகரங்களுக்கு புல்லட் ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம், தென்னிந்திய நகரங்களுக்கு இடையேயான பயண நேரம் குறைவதோடு பொருளாதாரம் மேம்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் மின்னணு மற்றும் செமிகண்டக்டர் துறை வளர்ச்சியடைந்து வருவதாக கூறிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

மின்னணு பொருட்கள் உற்பத்தியில் தெலங்கானா மாநிலம் முன்னணியில் உள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் உள்ள 315 பல்கலைக் கழகங்களில் செமிகண்டக்டர் வடிவமைப்பு பாடத்திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி, 5 லட்சம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீட்டின் கீழ், புல்லட் ரயில் சேவை திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

தெலங்கானா மாநிலம், **Secunderabad, Nampally** உள்ளிட்ட **42** ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும் என்றும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அனைவரின் ஒத்துழைப்பு அவசியம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

உலக மக்கள் தொகை தினத்தையொட்டி, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குடும்பக் கட்டுப்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்வின் முக்கியத்துவத்தை உலக மக்கள் தொகை தினம் எடுத்துரைப்பதாக கூறியுள்ளார்.

உள்ளார்ந்த மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையாக மக்கள் தொகை கட்டுப்பாடு அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குழந்தை பெறுவதில் முறையான கால இடைவெளி பின்பற்றப்பட்டால் தாய்-சேய் நலன் காக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை பிறப்புக்கு கால இடைவெளி முறையாக அனுமதிக்கப்பட்டால், ஆரோக்கியமான குழந்தை பிறப்புக்கும், அவர்களை சிரமமின்றி பராமரிப்பதற்கும் வாய்ப்புகள் கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குடும்பங்கள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு குழந்தை பிறப்பில் கால இடைவெளி அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கும், அவர்களுக்கான கவனிப்பை மேம்படுத்துவதற்கும் முறையான திட்டமிடல் அவசியம் என்றும் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

கிழக்கு சீன கடல் பகுதியில் உருவாகியுள்ள **BAVI** புயல் காரணமாக, ஜப்பானின் தெற்கு தீவுகளிலும், தைவான் பகுதியிலும் கனமழை பெய்து வருகிறது.

மணிக்கு **144** கிலோ மீட்டர் வேகத்தில் வீசும் புயல், நாளை வடக்கு தைவான் மற்றும் சீனாவின் **Zhejiang** மாகாணத்தில் கரையை கடக்கக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் **Okinawa-** தீவில் **200**க்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தைவானில் பள்ளி கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், **14** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சீனாவின் **Fujian** மாகாணத்தின் கடலோரப் பகுதியில் இன்று ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இப்பகுதியில் படகு சேவை மற்றும் அதிவிரைவு ரயில்சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>>>

அனைத்து வகை போக்குவரத்து வாகனங்களிலும் கார்பன் வெளியேற்றத்தை தடுக்க பிரிக்ஸ் நாடுகள் உறுதியளித்துள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற மூன்றாவது பிரிக்ஸ் நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், சாலை போக்குவரத்து, ரயில், வான்வழி மற்றும் நீர்வழி போக்குவரத்தில் உயிரி எரிபொருளை பயன்படுத்த வேண்டும் என்றும்,

காற்று மாசுவை கட்டுப்படுத்துவதற்கான நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், காற்று மாசடைவதை கட்டுப்படுத்தவும் பிரிக்ஸ் நாடுகள் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை பகிர்ந்துகொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், பிரிக்ஸ் போக்குவரத்து அமைச்சக பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், பிரேசில், சீனா, எகிப்து, இந்தோனேஷியா, ஈரான், ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, எத்தியோப்பியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் கலந்துகொண்டு அறிக்கைகளை அளித்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Ordos**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **10** ஆயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் **Shivaji Parashuram** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

வட்டு எறிதலில் **Priya**-வும், **400** மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் **Shravani**-வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிக்கி கலியாண்டா — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

----------

இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஒரு விக்கெட் இழப்பிற்கு **21** ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை **53** புள்ளி ஒரு ஓவரில், **8** விக்கெட் இழப்பிற்கு **159** ரன் எடுத்துள்ளது.

**Lords-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 285 ரன் எடுத்துள்ளது.**

**<<<<<END>>>>>>**